### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விரைவில் சட்டமன்றத்தில் மீண்டும் பொறுப்பேற்பார்!

# தன் குடும்பத்தையே நிர்வகிக்க முடியாத த.வெ.க. தலைவர் தமிழ்நாட்டை எப்படி நிர்வகிப்பார்?

## புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் — கே.என்.நேரு — எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, ஜூன் 27 - திமுக மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் சந்திர சேகரின் தாயார் பிச்சையம்மாள் பட திறப்பு விழா நிகழ்ச்சி விராலிமலை யில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ் ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு படத்தை திறந்து வைத்தனர்.

அப்போது இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் நம்ம தலைவரை பார்த்து கேட்கிறார் எங்க உங்க அப்பாவ காணோம் என்று, வருவார் சீக்கிரமே வந்துடுவார், அதுதான் எங்களால் சொல்ல முடியும், எவ்வளவு விரைவாக சட்டமன்றத்தில் மீண்டும் பொறுப்பேற்பார். அது உறுதி.

நேற்று வரை திமுகவினர் அமைதியாக இருந்தார்கள். ஆனால் நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் இது போன்று பேசியவுடன் அனைவரும் கிளம்பி உட்கார்ந்து விட்டார்கள். இனி விடமாட்டார்கள் என்றார்.

இதற்கு முன்னதாக முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில்:

சட்டமன்றம் திரையரங்கு போல அல்ல திரைப்பட படப்பிடிப்பு அரங்கம் போல் ஸ்டுடியோ போல் நடந்து கொண்டிருக்கிறது. முதலமைச்சர் கதாபாத்திரத்தில் ப்ரோ விஜய் நடித்துக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டு மக்களை எப்படி நடித்து ஏமாத்தினாரோ அதைபோல் சட்டமன்றத்தில் நடித்து வருகிறார். முதலமைச்சர் விஜய் முந்தாநாள் ஒரு தோற்றம் நேற்று ஒரு தோற்றம் முந்தாநாள் மாலை நடிகை திரிஷாவின் வீட்டில் வேறு ஒரு தோற்றம். இது போன்று தோற்றம் இருப்பது நடிகருக்கு ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை ஆனால் அரசியலிலும் இது போன்று நடிப்பதற்காக வந்திருக்கிறார் என்றால்





தமிழ்நாட்டு நிலைமையை எண்ணி வருத்தப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது.

17 லட்சம் வாக்குகள் மாறி விழுந்ததால் அவர்கள் தற்பொழுது ஆட்சியில் அமர்ந்துள்ளனர்.

ஒரு குற்றச்சாட்டை சொல்வதற்கு முன்பு அந்த குற்றச்சாட்டை சொல்வதற்கு தனக்கு தகுதி இருக்கிறதா என்பதை பார்க்க வேண்டும். நாம் அந்தத் தவறை செய்திருக்கிறோமா என்பதை எண்ணிப் பார்த்து தான் பேச வேண்டும்.

சட்டமன்றத்தில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வெளிநடப்புக்கு பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் குட்டி கதை ஒன்றை கூறியுள்ளார். அதில் அப்பாவை தேடி கொண்டு இருப்பதாக பேசியுள்ளார். உதயநிதி ஸ்டாலினுக்கு அப்பாவை தேட வேண்டிய அவசியம் இல்லை. அவரது அப்பா எங்கு இருக்கிறார் என்று அவருக்கு தெரியும். தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்க்கு தெரியவில்லை என்றால் நாங்கள் பொறுப்பு அல்ல.

தேர்தலுக்கு முன்பு எங்கள் தலைவரிடம் நாங்கள் கூறினோம். நடிகராக அவதாரம் எடுத்திருக்கின்ற அரசியல் கட்சித் தலைவர். ஒரு கணவன் சரியாக இருந்தால் விவாகரத்து கேட்டு செங்கல்பட்டு நீதிமன்றத்திற்கு செல்வாரா ஒரு தகப்பன் சரியாக இருந்தால் மகன் தகப்பனை விட்டு செல்வாரா என்று கேட்டோம். தந்தை நல்லவனாக இல்லை தந்தை நல்லவனாக இருந்தால் தந்தையை விட்டு விட்டு தாயுடன் மட்டும் மகன் இருப்பாரா. இதைக் கேட்டால் தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்வார்கள். தன் குடும்பத்தையே நிர்வகிக்க முடியாதவர் எப்படி தமிழ்நாட்டை நிர்வகிப்பார் என்ற கேள்வியே அன்றைக்கே கேட்டிருந்தால் இன்றைக்கு நமக்கு இந்த நிலைமை வந்திருக்காது. இன்றைக்கு இந்த கேள்வியை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

வாக்களித்தவர்களுக்கு தெரியாது. அவர்களது பின்புலம் என்ன? அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று தெரியாது. நாம் தான் எடுத்து சொல்லி ஆக வேண்டும் தமிழ்நாட்டுடைய தலையெழுத்து நாம் திராவிட மாடல் திராவிட புரட்சியை உருவாக்கினோம்.

ஆனால் இன்று விசில் மாடல் ஆட்சியை செய்து கொண்டிருக்கிறார்கள். விசில் புரட்சியில் வேதனை தான். எந்த நேரத்தில் தேர்தல் வந்தாலும் மக்களிடம் நாங்கள் பட்டியல் போட்டு காண்பிப்போம் என்று தெரிவித்தார்.

---

### சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் — முன்னாள் அமைச்சர்

## பி.கே.சேகர்பாபு மைத்துனர் எம்.கண்ணன் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 27-

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.வின் மைத்துனர் எம்.கண்ணன் (வயது 62) அவர்கள் நேற்று முன்தினம் (25.6.2026 - வியாழக்கிழமை) மதியம் 2 மணியளவில் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்களின் மைத்துனர் எம்.கண்ணன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் சகோதரர் சேகர்பாபு அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

---

### அமோனியா விஷவாயு:

## பலி எண்ணிக்கை 15 ஆக உயர்வு!

சென்னை.ஜூன்.27- திருவள்ளூர் பெரியபாளையம் அமோனியா விஷவாயு கசிந்த விபத்தில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த மேலும் ஒருவர் உயிரிழந்து மொத்த பலி எண்ணிக்கை 15 ஆக உயர்ந்தது.

பெரியபாளையம் அருகே கன்னிகைப்பேர் கிராமத்தில் கடல் உணவு பொருட்களை பதப்படுத்தும் தனியார் தொழிற்சாலை உள்ளது. இங்கு, கடல் வாழ் உயினங்களான மீன், இறால், நண்டு போன்றவை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த 21ம்தேதி ஆண், பெண்கள் என 120 பேர் கடல் உணவு பொருட்களை பதப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

திடீரென அமோனியா வாயு கசிவு ஏற்பட்டு 74 பேருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு மயங்கினர். மற்ற ஊழியர்கள் வெளியில் ஓடிவந்தால் உயிர் தப்பினர்.

இதையடுத்து அமோனியா வாயுவால் பாதிக்கப்பட்ட ஊழியர்களை சகதொழிலாளர்கள் ஆம்புலன்ஸ் மூலம் மஞ்சங்காரணை, செங்குன்றம் ஆகிய பகுதிகளில் உள்ள தனியார் மருத்துவமனைகளுக்கு அனுப்பினர்.

மேல் சிகிச்சைக்காக 15 பேர் ஸ்டான்லி மற்றும் ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களில் 14 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த நிலையில் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒடிசாவைச் சேர்ந்த இளம்பெண் புதுபாரி நாயக் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததால் பலி எண்ணிக்கை 15ஆக உயர்ந்தது.

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

### ஜூன் 27 (1962)



திராவிட இயக்க வரலாற்றில் 1938ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒருமைல் கல்லாகும். இந்தப் போராட்டத்தில் திருச்சி, உறையூர் முதல் சென்னை வரை 42 நாட்கள் இந்தி எதிர்ப்பு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் 577 மைல்கள் நடந்தே வந்தவர் இவர். 87 பொதுக் கூட்டங்களில் உரையாற்றியுள்ளார்.

மேலும், சென்னையில் பள்ளி முன் இந்தி திணிப்பை எதிர்த்து, மறியல் செய்து கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் வேலூர் சிறையில் இருந்தார்.

இவரின் 50 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு அவர் வாழும்போதே பெற்ற ஒரே அங்கீகாரம் தி.மு.க. சார்பில் அண்ணா வழங்கிய விருதுதான். சுயமரியாதை இயக்கத்திற்காக உழைத்தவர்களுக்கு தி.மு.க. சார்பில் விருது வழங்கி சிறப்பிக்க அண்ணா முடிவு செய்தார். இதற்கு இவருடைய பெயரைத்தான் அண்ணா முதன்முதலில் தேர்வு செய்தார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றபோது, முதல்முறையாக ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டத்தை தொடங்கி வைத்து அதற்கு "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்" என்று இவரது பெயரை வைத்து, தொடர்ந்து செயல்படுத்தினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

# தொழில் முதலீடுகளுக்குத் தேவை நம்பகத் தன்மை!

# இலக்கும் நோக்குமில்லாத நாயகத் தன்மையல்ல!

ஒரு குற்றச்சாட்டை முன்வைப்பது எளிது. ஆனால் அந்தக் குற்றச்சாட்டை நிரூபிப்பதுதான் நம்பகத்தன்மைக்கான சான்று. த.வெ.க. அரசு ஆட்சி பொறுப்பேற்றது முதல், முந்தைய தி.மு.க. ஆட்சி குறித்து குற்றச்சாட்டு வைப்பதிலேயே முனைப்பு காட்டுகிறது. குறிப்பாக, தனிநபர்கள் மீது மட்டுமல்ல; ஒரு மாநிலத்தின் வளர்ச்சி வரலாற்றின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு என்றால், அதற்கான ஆதாரங்கள் இன்னும் உறுதியானதாக இருக்க வேண்டும்.

த.வெ.க. அரசின் தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா, தொடர்ச்சியாக முன்வைத்து வரும் குற்றச்சாட்டுகள் அபத்தமாகவும், முதிர்ச்சியற்று உள்ளதாகவும் கருதுகிறேன். முந்தைய திமுக ஆட்சிக் காலத்தில் ஊழல் மற்றும் நிர்வாகத் தாமதங்கள் காரணமாக 25 பெரிய முதலீட்டுத் திட்டங்கள் தமிழ்நாட்டை விட்டு வெளியேறியுள்ளன, 3.3 லட்சம் கோடி ரூபாய் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளும், 2.3 லட்சம் வேலைவாய்ப்புகளும் பறிபோய்விட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டைக் கேட்டவுடன் எழும் கேள்விகள் மிகவும் எளிமையானது.

அந்த 25 திட்டங்கள் எவை? எந்த நிறுவனங்கள்?

எவ்வளவு முதலீடு? எப்போது தமிழ்நாட்டை விட்டு வெளியேறின? ஏன் வெளியேறின?

அவற்றின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் எங்கே? எனக் கேள்விகள் எழுகிறது.

**ஆவணங்கள் தரவுகள் இல்லை**

தொழில்துறை அமைச்சரின் வாயிலிருந்து இத்தகைய குற்றச்சாட்டு வந்த பிறகும், இதுவரை முழுமையான பட்டியல் வெளியிடப்படவில்லை. வெள்ளை அறிக்கை இல்லை. ஊழல் காரணமாக வெளியேறினார்கள் என்பதை நிரூபிக்கும் ஆவணங்களும் வெளியிடப்படவில்லை.

தமிழ்நாட்டின் தொழில் முதலீடுகள் குறித்த பேச்சு என்பது தேர்தல் மேடை பிரச்சாரம் அல்ல. அது பல லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பொருளாதார நடவடிக்கை. மாநிலத்தின் வளர்ச்சி, வேலைவாய்ப்பு சார்ந்த நம்பிக்கை உருவாக்கம். அதில் சிறுபிள்ளைத்தனமான அரசியல் செய்வது பெரும் இழப்புகளை கொண்டு வந்து சேர்க்கும்.



நீரை.மகேந்திரன்
பத்திரிகையாளர்

ஒரு நிறுவனம் எந்த மாநிலத்தில் முதலீடு செய்ய வேண்டும் என்று முடிவு எடுக்கும்போது, நிலம், துறைமுகம், மின்சாரம், தொழிலாளர் திறன், விநியோகச் சங்கிலி, சந்தை அணுகல், வரிச்சலுகை, உலகளாவிய பொருளாதார நிலை உள்ளிட்ட நூற்றுக்கணக்கான காரணிகளை கணக்கில் எடுத்துக்கொள்கிறது. தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஒப்பந்தம் செய்த பின்னர், வேறு மாநிலத்திற்கு மாறினால், அதற்கான ஒரே காரணம் ஊழல் என்று மட்டும் கூறிவிட முடியுமா? அமைச்சர் கீர்த்தனா குறிப்பிட்ட நிறுவனங்கள் ஏற்கெனவே, அந்தந்த மாநிலங்களில் தொழில் முதலீடு செய்துள்ள நிலையில், அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளியேறினார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும் ?

அது தொடர்பாக அந்த நிறுவனங்கள் ஏதும் விளக்கங்கள் அளித்துள்ளனவா எனத் தேடினால் எதுவும் இல்லை. தவிர, அமைச்சர் கீர்த்தனாவும் எந்த விளக்கங்களும் அளிக்கவில்லை. இந்தக் கேள்விகளை எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல; தொழில்துறை வட்டாரங்களும் எழுப்புகின்றன.

ஒரு முதலீடு அறிவிக்கப்படுவது, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகுவது, நிலம் ஒதுக்கப்படுவது, தொழிற்சாலை கட்டப்படுவது, உற்பத்தி தொடங்குவது என பல ஆண்டுகள் எடுக்கும். அப்படியும், கடந்த திமுக ஆட்சி காலத்தில் பல தொழில் முதலீடுகள் ஓராண்டு காலத்துக்குள், இரண்டு ஆண்டு காலத்துக்குள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

பெரம்பலூர் மாவட்டத்தில் தோல் பொருட்கள் அல்லாத காலணிப் பூங்கா, ஃபாக்ஸ்கான் நிறுவனத்துக் கான பணிபுரியும் மகளிர் விடுதி ஆகியவை முன்மாதிரியான முதலீட்டு முயற்சிகள். இன்னும் ஏராளமான முதலீட்டுத் திட்டங்கள் மூலம் 12.6 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டு உறுதிமொழிகளை பெற்றுள்ளதாக முன்னாள் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டுள்ளார். அதிலிருந்து 50 சதவீதம் முதலீட்டுத் திட்டங்கள் நடைமுறைக்கு வந்திருந்தாலும் , அதும் பெரும் முயற்சிதான்.

**இலக்கும் தொலைநோக்கும்...**

தமிழ்நாட்டின் வரவு செலவு இலக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 1 லட்சம் கோடி டாலராக உயர்த்துவது என முந்தைய திமுக அரசின் இலக்கிற்கு, இந்த தொழில் முதலீட்டுத் திட்டங்கள் பெரும் பக்கபலமாக இருந்தவை. முந்தைய அரசின் இலக்கும், தொழில் வளர்ச்சிகளும்தான் இந்திய அளவிலான பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பங்களிப்பாக 14 சதவீத பொருளாதாரத்தை எட்டியது எனலாம். முந்தைய இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தைத் தொட்டுள்ளது. 2024-25ஆம் நிதியாண்டில் 11.2%, 2025-26 ஆம் நிதியாண்டில் 13.16 % சதவீத பொருளாதார வளர்ச்சி கண்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி உருவாக்கத்துக்கு முன்பிருந்த புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2032 தான். ஆனால், 2026 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின் இறுதியில் உருவாக்கப்பட்டுள்ள 'ஸ்டார்ட் அப்' தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை 14,700. இந்திய அளவில் மிகச் சிறப்பான இடத்தில் தமிழ்நாட்டின் புத்தொழில் முயற்சிகள் உள்ளன. ஆசிய அளவில் சென்னை மிக முக்கியமான மையமாக வளர்ந்துள்ளது.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக திரு.விஜய் அவர்கள், கடந்த சில நாட்களுக்கு முன்னர் நிதி ஆயோக் கூட்டத்தில் வாசித்த அறிக்கையிலேயே, இந்த வளர்ச்சியை பதிவு செய்துள்ளார். அதிலும் குறிப்பாக, அந்த புள்ளிவிவரங்கள் அனைத்தும் நிதி ஆயோக் வெளியிட்டவைதான் என்பது முக்கியமானது.

தகவல்களும், தரவுகளும் கண் முன்னே இருக்கும் நிலையில், முந்தைய ஆட்சியின் முழு செயல்முறையையும் புறக்கணித்து, குற்றம் சாட்டுவது அரசியல் வசதியாக இருக்கலாம்; ஆனால் அது பொருளாதார விளக்கமாக இருக்க முடியாது.

இங்கே இன்னொரு கேள்வியும் எழுகிறது.

முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை விட்டு வெளியேறியதற்கு ஊழல்தான் காரணம் என்றால், அந்த ஊழலை செய்தவர்கள் யார்?

எந்த அதிகாரி? எந்த அமைச்சர்?

எந்த நிறுவனம் புகார் அளித்தது?

நிறுவனங்களிடம் 'கமிஷன் கரப்ஷன்' நடந்துள்ளது என கண்டுபிடிக்கத் தெரிந்த அமைச்சருக்கு, கண்டுபிடித்ததை வெளிப்படுத்துவதை யார் தடுத்தது?

ஆதாரங்கள் இருந்தால் வெளியிடுங்கள். நிறுவனங்களின் பெயர்களை சொல்லுங்கள். வெள்ளை அறிக்கை வெளியிடுங்கள். ஊழல் நடந்திருந்தால் குற்றவாளிகளை கைது செய்யுங்கள்.

அதற்குப் பதிலாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை மட்டும் மீண்டும் மீண்டும் கூறினால், அது தொழில்துறை கொள்கை விவாதமாக அல்ல; அரசியல் பிரச்சாரமாக மட்டுமே பார்க்கப்படும். ஆதாரங்களுடன் கூறப்படும் குற்றச்சாட்டு வேறு; அரசியல் மேடையில் வீசப்படும் குற்றச்சாட்டு வேறு. இரண்டுக்கும் மலையளவு வித்தியாசங்கள் உள்ளதை தேர்தலுக்கு முன் த.வெ.க. அளித்த வாக்குறுதிகளுக்கும், தேர்தலுக்கு பின்னர் த.வெ.க. ஆட்சியில் அறிவிக்கப்படும் திட்டங்களுமே சான்று.

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்களின் மகனும், ஆந்திர மாநில தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்த் துறை அமைச்சரான நாரா லோகேஷ், சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில், தமிழ்நாட்டில் முந்தைய தி.மு.க. ஆட்சி, தொழில் முதலீடுகளைத் திரட்டுவதில் மிகவும் நேர்மையாகவும், தொழில்முறையாகவும் செயல்பட்டதாகக் குறிப்பிட்டதைக் கவனிக்க வேண்டும். எந்தவொரு நிறுவன மும் தி.மு.க. அரசு லஞ்சம் கேட்டதாகத் தன்னிடம் கூறியதில்லை என்றும் அவர் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

**நீண்ட கால இலக்குகள்**

ஒரு பெரிய தொழில் திட்டம் அரசியல் ஆட்சிமாற்றத்தால் மட்டும் நிகழ்ந்து விட முடியாது. அது தொலைநோக்கும் இலக்கும் கொண்டது. பல ஆண்டுகள் நீளும் செயல்முறையும்கூட. இதுதான் எதார்த்தமான உண்மை. ஆனால், ஆட்சி பொறுப்புக்கு வந்த 30 நாட்களிலேயே, புள்ளிவிவரங்களை மறைத்து 'முந்தைய அரசின் தவறுகள்' என்று கூறும் அணுகுமுறை எவ்வளவு நம்பகமானது?

உண்மையில், இன்று ஆட்சியில் இருப்பவர்கள் மறந்துவிடக் கூடாத ஒரு விஷயம் இருக்கிறது. அவர்களே இன்று பெருமையாக அறிவிக்கும் சில முதலீடுகள், முந்தைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சிதான் என்று தொழில்துறை வட்டாரங்களில் பேசப்படுகிறது.

தமிழ்நாடு இந்தியாவின் மிகப்பெரிய தொழில் துறை மாநிலங்களில் ஒன்று. ஆட்டோமொபைல், மின்னணு உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஏற்றுமதி, தகவல் தொழில்நுட்பம் என பல துறைகளில் மாநிலம் கட்டியெழுப்பிய அடித்தளம் ஒரு நாளில் உருவானதல்ல. பல பத்தாண்டுகளாக ஆட்சியில் இருந்த திராவிடக் கட்சிகள் உருவாக்கிய கட்டமைப்பின் விளைவுகள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொலைநோக்கும், இலக்கும் தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சியில் பின்னிப்பிணைந்துள்ளது. அந்த வரலாற்றை மறைத்து வைத்து, "25 முதலீடுகள் போய்விட்டன" என்று கூறுவது அரசியல் வன்மமாக இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி பற்றிய விவாதமாக இருக்க முடியாது.

ஏனென்றால் தொழில்துறை முதலீடுகள் உணர்ச்சிகரமான 'ரீல்ஸ்'களால் வருவதில்லை. நாயக பிம்பத்தால் ஆட்சியை பிடித்திருக்கலாம். ஆனால், தொழில் முதலீடுகள் வருவதற்கு தேவை நம்பகத் தன்மை. அந்த நம்பகத் தன்மையை உருவாக்குவது அரசின் கடமை; முந்தைய தி.மு.க. அரசு அதை சிறப்பாகச் செய்தது. இந்த அரசிடம் நம்பகத்தன்மை இல்லை. முன்னுக்குப் பின் முரணான குற்றச்சாட்டுகளை மட்டும் முன்வைக்கிறது. தமிழ்நாட்டின் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை தக்க வைக்க வேண்டுமெனில், இலக்கும் தொலைநோக்கும் வேண்டும். இல்லையெனில், பொருளாதாரம் பெருத்துக் கொண்டிருக்கும் வயிறு ; புள்ளி விவரங்கள் காட்டிக் கொடுத்து விடும்.